O.S. No. 82/2025 **நாள்: 01.06.2026**

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு ஜுன் மாதத்தில் 01–ம் நாள் **வாதி ரமேஷ்பாபு PW–1** என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. ராமலட்சுமி, உதவியாளர் நிலை–3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ரமேஷ்பாபு** | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | லிங்கன் (இறப்பு) | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 58 |
| தாலூக்கா | : | | சாதி | : | |

---

<u>வாதி தரப்பு முதல் விசாரணை :</u>

நான் இந்த வழக்கில் **வாதி** ஆவேன். இன்று, நான் முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளைப் படித்து கேட்டு தெரிந்து கொண்டேன். அவைகள் யாவும் சரியானவை என்று நான் உறுதி கூறுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 25.09.1997 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவாளர் அலுவலக இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 09.04.2025 தேதியிட்ட தானப்பத்திரத்தின் பதிவாளர் அலுவலக இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 13.05.2025 தேதியிட்ட இணையவழி சிட்டா **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 03.05.2025 தேதியிட்ட தேனாடுகோம்பை காவல் நிலையம் வழங்கிய மனு ரசீது அசல் மனு ரசீது எண் 37/2025 **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வேண்டுகோளின் பெயரில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.01 17:52:19 +0530